**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 112/2017**

DW1– திரு.மிக்கேல் நாள். 12.02.2025

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துவிவரம் சரியாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சொத்து விவரங்களில் எந்த விவரம் தவறாக உள்ளது என்றால் நான்கு மால் விவரங்கள் தவறாக உள்ளது. தாவா சொத்தின் நான்கு மால் என நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் மேற்கே எனது அக்கா அந்தோணியம்மாள் வீடு, தெற்கே அந்த வீட்டிற்கு செல்ல 6 அடி பாதை உள்ளது. கிழக்கே வாய்க்கால், வடக்கே இன்னாசி உடையார் வகையரா சொத்துக்கள் ஆகும்.

2. இந்த வழக்கு சொத்தின் பழைய சர்வே எண். 90/1 என்றால் சரிதான். என்னுடைய சொத்து சர்வே் எண் 90/3 ஆகும். நான் மேலே சொல்லப்படட்டுள்ள நான்கு மால்கள் சர்வே எண். 90/3 சொத்தின் நான்கு மால் என்றால் சரிதான். வழக்கில் நான்கு மால் விவரங்கள் சரியாக சொல்லப்பட்டுள்ளது என்றும் தவறு என்றுபொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. குழந்தைசாமி, மரிய ஆரோக்கியம், தைணிஸ்அம்மாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் குழந்தைசாமியை மட்டும் தெரியும் மற்றவர்களை தெரியாது. வாதியின் தந்தை பெயர் மிக்கோல் உடையார் என்றால் சரிதான். மிக்கேல் உடையாரின் உடன் பிறந்தவர்கள் இன்னாசி உடையார் என்றால் இன்னாசி உடையார், சந்தியாகு உடையார் ஆகும்.

4. வாதி வழக்கில் என்ன விவரங்கள் சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழககில் நான் என்ன பதில் சொல்லியுள்ளேன் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை